2019 ஜூலை 5]

சிறு வழக்குகளை விசாரிக்கின்ற நீதிமன்றங்களாகத்தான் நாங்கள் அறிவித்தோம். ஆனால், ஒரு நல்ல செய்தி, அந்த நீதிமன்றங்கள் Munsif–cum–Magistrate Court *ஆக இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. முழுமையான நீதிமன்றங்களாக இன்றைக்கு அவை தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த 51 நீதிமன்றங்களும் முழுமையான நீதிமன்றங்களாக இன்றைக்கு செயல்படவிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று அதைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

46—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***37520—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் தொகுதி, கொழுமங்கொண்டான், நரிக்கல்பட்டி, சந்தயிசெட்டி வலசு மற்றும் அமரப்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒட்டன்சத்திரம் தொகுதி, கொழுமங்கொண்டான், நரிக்கல்பட்டி, சந்தன்செட்டி வலசு மற்றும் அமரப்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என ஒட்டன்சத்திரம் தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளார்கள். இந்தச் சங்கங்கள் புதிதாக அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கையோ, விண்ணப்பமோ அரசுக்கு இதுநாள்வரை வரப்பெறவில்லை. அங்கே சங்கங்கள் அமைக்க வேண்டும் என்று விரும்புகிற உறுப்பினர்களால் முதன்மை அமைப்பாளர்மூலம் கோரிக்கை

வரப்பெற்றால், விரைந்து வேகமாக முடிவெடுத்து, அறிவித்து வருகிற எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு உடனடியாக இந்தச் சங்கங்கள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட சந்தன்செட்டி வலசு, கொழுமங்கொண்டான், நரிக்கல்பட்டி, அமரப்பூண்டி போன்ற பகுதிகளிலே கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வந்தால் அதை அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். கணக்கன்பட்டி, பூலாம்பட்டி, அமரப்பூண்டி போன்ற பகுதிகளிலே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பழனியிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கத்திலேதான் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். எனவே, அவர்கள் கைத்தறி ஆடை நெய்வதற்கு மூலப் பொருட்களை வாங்க வேண்டும் என்று சொன்னால், சத்தியமங்கலம் மற்றும் கோயம்புத்தூருக்குச் சென்று வாங்கி வந்து, சேலை உற்பத்தி செய்து, அங்கே கொண்டுபோய் தனியாருக்கு விற்க வேண்டிய நிலைமையிருக்கிறது. தனியார் அதிலே இலாபம் சம்பாதிக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கண்டறிந்து, தனியார்கள் இலாபம் அடைவதைத் தடுக்கின்ற விதத்திலே, கணக்கன்பட்டியில் கைத்தறி நெசவாளர்களுக்கென கூட்டுறவுச் சங்கத்தை அமைத்து, எந்தெந்த கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்திருக்கின்றனவோ, அவற்றுக்கெல்லாம் வேண்டிய மூலப் பொருட்களை அரசாங்கமே கொடுத்து, கூடுதலான நிதியைக் கொடுத்து, அந்த நெசவாளர்கள் பயன்பெறுகின்ற விதத்தில் வருங்காலத்தில் அதைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

அதுமட்டுமல்லாமல், அரசின் தள்ளுபடி மானியம் நரிக்கல்பட்டிக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய், கொழுமங்கொண்டானில் 35 இலட்சம் ரூபாய், சந்தன்செட்டி

2019 ஜூலை 5]

வலசில் 45 இலட்சம் ரூபாய் வராமல் இருக்கின்றது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசின் தள்ளுபடி மானியத்தை உடனடியாக அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, நெசவாளர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நெசவாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஓராண்டுகாலமாக மருத்துவமனைக்குச் சென்றால் அதற்கான காப்பீட்டுத் திட்ட நிதி கிடைப்பதில்லை. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு, நிறைவேற்றுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 4 ஊராட்சிகளில் புதிதாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த உறுப்பினர்கள் பழனி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் செயல்பட்டுவருவதால் தூரம் அதிகமாக இருப்பதால், அவர்களையெல்லாம் பிரித்து, புதிதாக சங்கம் அமைத்துத் தர வேண்டும் என்கிற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையின்மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் வேண்டியதுபோல் சங்கம் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அடுத்து, தள்ளுபடி மானியத்தைப் பற்றி இங்கு சொன்னார்கள். தள்ளுபடி மானியத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசு, marketing incentive *என்கிற உதவித் தொகையை வழங்கி வந்தது. அது கடந்த 2 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏன் நிறுத்தப்பட்டிருக்கிறது என்றால், 30 இலட்சம் ரூபாய்க்குமேல், அந்தச் சங்கத்தில் அவர்கள்* turnover *செய்கிறார்கள் என்றால், அவர்களுக்கு* incentive *இல்லையென்று ஓர் உத்தரவு வந்திருக்கிறது. அந்த உத்தரவை திரும்பப் பெற வேண்டும். வறுமையில் இருக்கக்கூடிய*

நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கு உதவியாக இந்தத் தொகை இருப்பதால் திரும்ப வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வழங்கவில்லை என்பதற்காக விட்டுவிடாமல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 80 கோடியாக இருந்த தமிழ்நாடு அரசினுடைய தள்ளுபடித் தொகையை இந்த ஆண்டு ரூபாய் 150 கோடியாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அது இன்னமும் பாக்கி இருக்கிறது. அந்தத் தள்ளுபடித் தொகை நீண்டகாலமாக அரசினுடைய நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது நான் பொறுப்பேற்றதற்குப் பின்னர் அந்தத் தள்ளுபடித் தொகை தொடர்பாக, சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறேன். அதனால் விரைவில் அது குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை, இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் புதிதாக சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு மத்திய அரசு காப்பீட்டுத் திட்டத்தை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. உடனடியாகத் தேர்தல் வந்துவிட்ட காரணத்தால், Code Of Conduct வந்துவிட்ட காரணத்தினால், அரசு தேர்தலை சந்தித்து, அதன் பிறகு பட்ஜெட் கூட்டத் தொடர் வந்துவிட்ட காரணத்தினாலும், இது காலம் கடந்திருக்கிறது. நான் மத்திய அரசினுடைய ஜவுளித் துறை அமைச்சர் அவர்களை புதுதில்லியில் நேரில் சந்தித்து, எங்களுக்கு இந்த 2 கோரிக்கைகள் சம்பந்தமாக உடனடியாக positive-ஆக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்களும் பட்ஜெட் கூட்டத் தொடருக்குப் பின்னர் சிறப்பாக இதைச் செய்து கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. அர. சக்கரபாணி, தாங்கள் இரண்டாவது கேள்வி கேட்டுவிட்டீர்கள் அல்லவா?

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இப்போதுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கேளுங்கள்.

2019 ஜூலை 5]

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் சின்னாளபட்டி சுங்குடிச் சேலை என்பது மிகவும் பிரசித்தி பெற்றது. தமிழகம் முழுவதும் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மக்கள் அங்கு வந்து அந்தச் சேலையை வாங்கிச் செல்கின்றார்கள். அங்கே குடிசைத் தொழிலாக 10,000–க்கு மேற்பட்ட நபர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஏற்கெனவே, இந்த அவையில் வீற்றிருக்கின்ற எங்கள் ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான மாண்புமிகு அண்ணன் திரு. இ. பெரியசாமி அவர்களும் ஒரு முறை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற சமயத்தில் மாண்புமிகு ம்கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற விதத்தில், அங்கு அரசாங்கத்தின் மூலமாக நிலத்தை கையகப்படுத்தி, ஒரு dyeing factory அமைக்க வேண்டும் என்று கோரினார்கள். ஏனென்றால் அங்கே இருக்கின்ற 10,000–க்கும் மேற்பட்ட குடிசைத் தொழில் செய்கின்றவர்கள், dyeing unit–க்காக மதுரை சென்று அந்த சேலைகளை அங்கு கொடுத்து வாங்கி வந்து, இங்கு விலைக்கு விற்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு இலாபம் குறைவாகக் கிடைக்கிறது. சின்னாளப்பட்டியில் 10,000–க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, வருங்காலத்தில், அரசே நிலத்தை கையகப்படுத்தி அவர்களுக்கு dyeing unit அமைப்பதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

இன்றைக்கு கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற நெசவாளர்கள் தாங்கள் தயாரித்த ஆடைகளை விற்கின்றபோது GST வரி 5 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. எனவே, தயவு செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, தில்லியில் உள்ள மத்திய அரசை வலியுறுத்தி, குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கெல்லாம் இந்த 5 சதவிகிதம் GST வரியை முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 35–வது GST கூட்டம் தில்லியில் நடைபெற்றபோது, தமிழக அரசின் சார்பில் மொத்தம் 69 பொருட்களுக்கும், 8 சேவைகளுக்கும் GST வரி குறைப்பு செய்யப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதிலே, கோ–ஆப்டெக்ஸ்க்கு, அதாவது, கைத்தறியினால் உற்பத்தி செய்யப்படும் அத்துணை பொருட்களுக்கும் ஏற்கெனவே விதிக்கப்பட்ட 5 சதவிகித GST வரியிலிருந்து முழுமையான அளவிற்கு வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்கின்ற அந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எனவே, 36–வது GST கூட்டத்தில் அதனை வலியுறுத்தி மீண்டும் வரி விலக்கு பெறுவதற்கு நிச்சயமாக, உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதில் dyeing unit அமைத்துத் தரவேண்டுமென்று அவர் கேட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் dyeing unit அமைப்பதற்கான feasibility இருக்குமானால், அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லையென்றால், அங்கு ஓர் இடத்தைத் தேர்வு செய்து தந்தால், மாவட்ட நிருவாகத்தின்மூலம் அரசுக்கு கோரிக்கை வருமானால், அந்தப் பகுதியில் dyeing unit அமைப்பதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், ZLD என்று சொல்லக்கூடிய பூஜ்ய நிலை திரவ வெளியேற்றத்தை நாம் கொடுக்க வேண்டும். அதிலே நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இதுபோன்று dyeing unit அமைக்க முற்பட்டால், அந்தப் பகுதி மக்கள் பிரச்சினை செய்கிறார்கள், போராட்டங்கள் நடத்துகிறார்கள். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே

2019 ஜூலை 5]

feasible ஆன இடத்தைத் தேர்வு செய்து, பிரச்சினை இல்லாத நிலையை உருவாக்கிக் கொடுத்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் கோரிக்கை வரப்பெற்றால், கண்டிப்பாக, உடனடியாக அந்தக் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

GST வரி குறைப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். கதருக்கு GST வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று கைத்தறித் தொழிலும் கதர் தொழிலை ஒத்த தொழில்தான். மத்திய அரசு மற்றும் மாநில அரசின் உதவியினால்தான் கைத்தறித் துறையே இயங்குகிறது, நெசவாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கைத்தறித் தொழிலுக்கும் 5 சதவிகித GST வரியிலிருந்து விலக்கு பெறுவதற்கான முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், GST council–லில் இடம் பெற்றிருக்கின்ற மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் இந்த முறை அந்தக் கூட்டத்திற்குச் செல்கிறபோது, வெற்றியோடு திரும்புவார் என்று நான் நம்பிக்கையாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் தி.மு.க. சட்டமன்ற கொறடா அவர்கள் கேட்டுக்கொண்டபடி, இந்தச் சங்கம் அமைப்பதற்கு உங்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றால், உடனடியாக அமைத்துத் தரப்படும் என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபகரமில்லாத இடம் வழங்கப்பட்டால், அங்கு dyeing unit அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். சின்னாளப்பட்டியில் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற 25,000 நெசவாளர்கள் சுங்குடிச் சேலை தயார் செய்வதற்காக, அவர்களுக்கு குறைந்த விலையில்

அங்கே ஒரு dyeing unit அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியைச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த முறை, நான் இதே அவையில் இதுகுறித்துப் பேசியபோது இடம் தயாராக இருக்கிறது என்று தெரிவித்தேன். குறிப்பாக, எந்தவித ஆட்சேபகரமும் இல்லாத இடம் இருக்கிறது, அதற்கு நிதி வேண்டுமென்றாலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எவ்வளவு வழங்க வேண்டுமோ அதைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அங்கே இந்த dyeing unit மிகவும் அவசியம் தேவை. காரணம் ஏழு அல்லது எட்டு ஆண்டுக்காலமாக மதுரைக்குச் சென்று வருகிறார்கள். தினந்தோறும் மதுரைக்குச் சென்று dyeing போட்டுவந்தால் சேலை தயார் செய்வதற்கு ஆயிரக்கணக்கில் செலவாகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே ஆர்வமாக இருக்கிறார்கள். நிலத்தையும் தேர்வு செய்து, அதற்கு நிதி கொடுக்க வேண்டிய அவசியம் இருந்தால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்குவதற்கு தயாராக இருக்கிறேன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து அதனுடைய விவரங்களை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தர இருக்கிறேன். நிச்சயம் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் 25 ஆயிரம் நெசவாளர்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். எங்களுடைய கணக்கின் அடிப்படையில் கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் 5,860 பேரும், தனியார் கைத்தறி நெசவாளர்கள் 1,830 பேரும், மொத்தமாக 7,690 நெசவாளர்கள்தான் இருக்கிறார்கள். அதைப்பற்றி பரவாயில்லை. 20 ஆயிரம் நெசவாளர்கள் இருந்தாலும் ஒன்றுதான், 7 ஆயிரம் நெசவாளர்கள் இருந்தாலும் ஒன்றுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க dyeing unit அமைப்பதற்கு போதிய நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில், அங்கே முதலீட்டாளர்கள் தங்களுடைய முதலீட்டு பங்காக வங்கியில் கடன் பெற்றோ அல்லது சொந்தமாகவோ முதலீடு செய்ய வேண்டும். அதற்கு

அவர்கள் முன்வருவார்கள் என்று சொன்னால், உடனடியாக உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

47—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***38078—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கேதுவாக, நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்கள்.

திரு. அ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தில் நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா